**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**
**நலன்புரி நன்மைகள் சபை**

# பதவி வெற்றிடம்

**பதவியின் பெயர்** : உதவி மேசை அலுவலர் (Help Desk Operator)

**பதவிகளின் எண்ணிக்கை** : 03

**நியமனத்தின் தன்மை** : ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கான ஆட்சேர்ப்பு. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமநிதிய நலன்களைப் பெறத் தகுதிபெறுவர்

**சம்பளம்** : ரூ.45000.00 சகல கொடுப்பனவுகளும் அடங்கலாக

**வயது** : 18 வயதிற்கு மேற்பட்ட 45 வயதிற்கு கீழ்ப்பட்டோராகவிருத்தல்

**தகுதிகள்** :

- கல்வி

கல்விப் பொது சான்றிதழ் (சாதாரண தரம்) தேர்வில்

i. சிங்களம் / தமிழ்
ii. கணிதம்
iii. ஆங்கில மொழி (பதவியின் செயற்பாட்டிற்கு தேவைப்படுமிடத்து)

ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்ததோடு மற்றும் 04 பாடங்களில் திறமைச் சித்தியினை உள்ளடக்கிய பாடங்களாக

கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர்தரம்) தேர்வில் மூன்றில் பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (பொதுப் பரீட்சையின் சித்தி நீங்கலாக).

- பதவிக்கு தேவையான பிற தகுதிகள் :

பதவியின் செயற்பாடிற்குத் தொடர்புடையதான பாடப் பகுதியில் 03 மாதங்களுக்கு குறையாதவாறான ஒரு கற்கை நெறியினை முடித்திருத்தல் வேண்டும்.

**ஏனைய தகுதிகள்** :

- விண்ணப்பதாரி

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளைச் செய்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நடத்தை மற்றும் ஒழுக்கமுடையவராயிருத்தல் வேண்டும்.

**பதவிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள்** :

- நலன்புரி நன்மைகள் சபைக்கு வருகை தரும் சேவைபெறு விருந்தினர்கள், பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் தேவைகளைக் கேட்டறிந்து உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- நலன்புரி நன்மைகள் சபை மற்றும் அதனால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விடுக்கப்படும் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமான

வினவல்களுக்கு தெளிவான மற்றும் துல்லியமான பதில்களை வழங்குவதன் மூலம் வினைத்திறனான சேவையினை வழங்கல்.

- வரவேற்பு மேசையில் நிறுவப்பட்டுள்ள தொலைபேசிகளை சரியான முறையில் கையாளல் மற்றும் பராமரித்தலோடு தினமும் புதுப்பிக்கப்படுகின்றதான தொலைபேசி விபரக்கொத்தினைப் பேணுதல்.

- நலன்புரி நன்மைகள் சபையின் திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற பிற கடமைகள்.

**ஆட்சேர்ப்பு முறை** :

அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்காணலுக்கு உட்படுத்தப்படுவார்கள் மற்றும் பெறப்படும் மதிப்பெண்களின் தொடர் ஒழுங்கின் தரவரிசையின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

விண்ணப்பப் படிவத்தை பின்வரும் இணையத் தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் :
https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-vacancies/section/current%20vacancies
https://www.wbb.gov.lk/web/si/jobs

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2023.11.22 திகதி அல்லது அதற்கு முன்னராக **ஆணையாளர், நலன்புரி நன்மைகள் சபை, முதலாம் தளம், புதிய கட்டிடம், நிதி மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, கொழும்பு - 01** எனும் முகவரிக்கு பதிவு தபாலின் மூலமாக அல்லது wbb.commisioner.vacancy@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம். தாமதமான, பூரணப்படுத்தப்படாத மற்றும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

மேற்படி பதவிக்கான நியமனம் தொடர்பில் இரத்துச்செய்தல், திருத்துதல், மாற்றங்களேற்படுத்துதல் மற்றும் விண்ணப்பதாரர்களினது இறுதிப்பட்டியலைத் தயாரித்தலோடு தொடர்புடையதான சகல இறுதி முடிவுகள் யாவும் நலன்புரி நன்மைகள் சபையினைச் சார்ந்ததாகும்.

**ஆணையாளர்**
**நலன்புரி நன்மைகள் சபை**
**முதலாம் தளம் புதிய கட்டிடம்,**
**நிதி மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,**
**கொழும்பு - 01**